பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

23 11 2024 **SATURDAY** **12.40 PM** ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- மகாராஷ்ட்ரா மற்றும் ஜார்கண்ட் சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.
- மகாராஷ்ட்ராவில் பிஜேபி தலைமையிலான கூட்டணியும், ஜார்கண்டில், காங்கிரஸ் - ஜார்கண்ட் முக்திமோர்ச்சா கூட்டணியும் முன்னிலை பெற்றுள்ளன.
- வயநாடு மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் திருமதி பிரியங்கா காந்தி மூன்று லட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.
- வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- உலக ராணுவ மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா, இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மற்றும் ஜார்கண்ட் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.

மகாராஷ்ட்ராவில் பிஜேபி தலைமையிலான கூட்டணியும், ஜார்கண்டில், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா – காங்கிரஸ் கூட்டணியும் முன்னிலை வகிக்கின்றன

288 உறுப்பினர்களை கொண்ட மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பிஜேபி 123 தொகுதிகளிலும், ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவ்சேனா 55 தொகுதிகளிலும், அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் 38 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளன.

காங்கிரஸ் கட்சி 19 தொகுதிகளிலும், அதன் கூட்டணி கட்சியான சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் 13 தொகுதிகளிலும், உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவ்சேனா 19 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

81 உறுப்பினர்களை கொண்ட ஜார்கண்ட் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், ஆளும் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா 28 தொகுதிகளிலும், அதன் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ் 14 தொகுதிகளிலும், ராஷ்ட்ரிய ஜனதாதள் 4 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

பிஜேபி 29 தொகுதிகளிலும், அதன் கூட்டணி கட்சியான ஏ ஜே எஸ் யூ பி ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

<<<<<<>>>>>

வயநாடு மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் திருமதி பிரியங்கா காந்தி, தமக்கு அடுத்தப்படியாக வந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் திரு சத்யன் **Mokery-**யை விட, 3 லட்சத்திற்கும் கூடுதலான வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் **Nanded** மக்களவைத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பிஜேபி வேட்பாளர் டாக்டர் **Santukrao Marotrao Hambarde**, காங்கிரஸ் வேட்பாளர் திரு **Chavan Ravindra Vasanth Rao -** விட 13 ஆயிரத்திற்கும் கூடுதலான வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

<<<<<<>>>>>

உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம் உள்ளிட்ட 13 மாநிலங்களுக்கு உட்பட்ட 46 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளும் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.

மேற்குவங்கத்தில் ஆறு தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் அனைத்து தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் ஒன்பது தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் ஐந்து தொகுதிகளில் பிஜேபி-யும், 3 தொகுதிகளில் சமாஜ்வாதி கட்சியும், ஒரு தொகுதியில் ராஷ்ட்ரிய லோக்தள் கட்சியும் முன்னிலை வகிக்கிறது.

உத்தராகண்டின் கேதர்நாத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பிஜேபி வேட்பாளர் திருமதி **Aisha Nautiyal** தமக்கு அடுத்தப்படியாக வந்த காங்கிரஸ் வேட்பாளரை விட, 2 ஆயிரத்து 468 வாக்குகள் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

மத்தியப்பிரதேசத்தில் 2 தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலிலும் பிஜேபி முன்னிலை வகிக்கிறது.

மேகாலயாவில் ஒரு தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் தேசிய மக்கள் கட்சி வேட்பாளர் முன்னிலை பெற்றுள்ளார்.

ராஜஸ்தானில் ஏழு தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், பிஜேபி 2 தொகுதிகளிலும், காங்கிரஸ், பாரத் ஆதிவாசி கட்சி, ராஷ்ட்ரிய லோக்தாந்ரி கட்சி தலா ஒரு தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளன.

பஞ்சாபில் நான்கு தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் ஆம் ஆத்மி 3 தொகுதிகளில், காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளன.

கர்நாடகாவில் மூன்று சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலிலும் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது.

கேரளாவில் இரண்டு தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் ஒரு தொகுதியில் காங்கிரஸும், மற்றொரு தொகுதியில் மார்க்சிஸ்ட் கட்யூனிஸ்ட் கட்சியும் முன்னிலை பெற்றுள்ளன.

பீகாரில் 4 தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், பிஜேபி 2 தொகுதியிலும், மதசார்பற்ற இந்துஸ்தானி அவாம் மோட்சா, ஐக்கிய ஜனதாதள் தலா ஒரு தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

சத்தீஸ்கரில் ஒரு தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பிஜேபி-யும், குஜராத்தில் ஒரு தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியும் முன்னிலை பெற்றுள்ளன.

அஸ்ஸாமில் ஐந்து தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், பிஜேபி 2 தொகுதிகளிலும், காங்கிரஸ், அஸ்ஸாம் கனபரிட்சத், ஐக்கிய மக்கள் கட்சி தலா ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

<<<<<<>>>>>

"இந்தியாவை அறிந்துகொள்வோம்" வினாடி – வினா போட்டியில் வெளிநாடுவாழ் இந்தியர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கும் - இந்தியாவிற்குமான இணைப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த வினாடி – வினா நடத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த போட்டியில் வெற்றிபெறுபவர்கள் இந்தியாவை அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் இன்று நடைபெற்று வருகிறது.

வாக்குச்சாவடிகளில் நடைபெற்று வரும் இந்த முகாம்களில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் முகவரி மாற்றம் போன்றவற்றை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

நாளையும், இத்தகைய சிறப்பு முகாம்கள் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

உலகின் மிகப்பெரிய மருத்துவ காப்பீடான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

நாடு முழுவதும் இந்த திட்டம் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தங்களது மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இந்த திட்டம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - பயணாளிகள் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

ஐயப்ப பக்தர்களின் வசதிக்காக, **Srikakulam** சாலை - கொல்லம் இடையே டிசம்பர் மாதம் ஒன்றாம் தேதி முதல், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் தேதிவரை ஞாயிற்றுக்கிழமைதோறும் சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

மறுமார்க்கத்தில் இந்த ரயில் அடுத்த மாதம் 2-ஆம் தேதிமுதல், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 27-ஆம் தேதிவரை திங்கட்கிழமைதோறும் இயக்கப்படுகிறது.

இதேபோல், விசாகப்பட்டினம் - கொல்லம் இடையே அடுத்த மாதம் 4-ஆம் தேதி தொடங்கி, அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ஆம் தேதிவரை, புதன்கிழமை தோறும் சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

இது மறுமார்கத்தில் அடுத்த மாதம் 5-ஆம் தேதி தொடங்கி, பிப்ரவரி மாதம் 27-ஆம் தேதிவரை வியாழக்கிழமைகளில் இயக்கப்பட உள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது, நாளை மறுநாள் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையக்கூடும் என்றும், இதன்பின்னர் அடுத்த இரண்டு நாட்களுக்கு தமிழக - இலங்கை கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ராணுவ மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**Armenia-**வின் **Yerewan-**ல் நடைபெற்ற இப்போட்டியில் மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் **Reetika Hooda**–வும், 55 கிலோ எடைப்பிரிவில் **Jyoti Sihag** தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 70 கிலோ எடைப்பிரிவில் **Subedar Sharwan** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் **Shubham** –மும், 79 கிலோ எடைப்பிரிவில் **Chander Mohan**-னும், மகளிர் 68 கிலோ எடைப்பிரிவில் **Priyanka-**வும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா 3 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

<<<<<<>>>>>

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் நாளான இன்று, இந்தியா இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன்வரை விக்கெட் இழப்பின்றி 84 ரன் எடுத்துள்ளது.

பெர்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் 7 விக்கெட் இழப்பிற்கு 67 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிய ஆஸ்திரேலியா, 104 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Mitcheel Starc** 26 ரன் எடுத்தார்.

பும்ரா அபாரமாக பந்துவீசி ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

**Harshit Rana** மூன்று விக்கெட்டுகளையும், முகமது சிராஜ் இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

<<<<<<>>>>>